| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600 006, | அனைத்து முதன்மைக் கல்வி<br>அலுவலர்கள்,<br>(புதுச்சேரி மற்றும் காரைக்கால் தவிர). |

ந.க.எண்: 011101 /டி(1)/2023 நாள்: 07 .08.2023

ஐயா/அம்மையீர்,

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத் தேர்வு, செப்டம்பர் 2023 – தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் – விண்ணப்பித்தல் – அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தேர்வு தொடர்பான அறிவுரைகள் வழங்கிடக் கோருதல் – தொடர்பாக.

பார்வை : இவ்வலுவலக அறிவிப்பு நாள். 01.08.2023

*****

தமிழ்நாட்டில் அரசுப் பள்ளி மாணவ மாணவியர்களின் திறனைக் கண்டறிவதற்கும், அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், 2023– 2024 ஆம் கல்வியாண்டு முதல் "தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத் தேர்வு" நடத்தப்படவுள்ளது.

பார்வையில் காணும் இவ்வலுவலக அறிவிப்பில் 23.09.2023 அன்று நடைபெறவுள்ள "தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத் தேர்விற்கு" விண்ணப்பிக்க விரும்பும் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பதினொன்றாம் பயிலும் வகுப்பு மாணவர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலாக விண்ணப்ப படிவத்தினை 07.08.2023 முதல் 18.08.2023 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும், அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து தேர்வு

கட்டணம் ரூ.50/- (ரூபாய் ஐம்பது மட்டும்) சேர்த்து 18.08.2023-ற்குள் மாணவர் பயிலும் பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தங்கள் அதிகார எல்லைக்குட்பட்ட அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர் இத்தேர்விற்கு விண்ணப்பித்திட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உரிய அறிவுரைகள் வழங்கிடவும், தேர்வு தொடர்பான அறிவிப்பினை மாணவர்கள் அறியும் வண்ணம் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளின் அறிவிப்புப் பலகையில் ஒட்டவும், அதிக எண்ணிக்கையிலான மாணாக்கர்கள் விண்ணப்பித்திட ஊக்குவித்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஒம்/-
**இயக்குநர்**

**இணைப்பு:** அறிவிப்பு

**நகல்**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை)
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் - தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6**

**தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத்தேர்வு, செப்டம்பர் 2023**

**அறிவிப்பு**

அரசு பள்ளி மாணவ, மாணவியர்களின் திறனை கண்டறிவதற்கும் அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் 2023-2024-ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத்தேர்வு நடத்தப்படவுள்ளது. அரசுப் பள்ளிகளில் மாநிலப் பாடத் திட்டத்தின்கீழ் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கலாம். இத்தேர்வில் 1000 மாணாக்கர்கள் (நடைமுறையில் உள்ள இடஒதுக்கீடு பின்பற்றி 500 மாணவர்கள் + 500 மாணவியர்கள்) தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு உதவித்தொகையாக ஒரு கல்வியாண்டிற்கு ரூ.10,000/- (மாதம் ரூ.1000/- வீதம் ஒரு கல்வியாண்டிற்கு 10 மாதங்களுக்கு மட்டும்) இளநிலை பட்டப்படிப்பு வரை வழங்கப்படும்.

தமிழ்நாடு அரசின் 9 மற்றும் 10-ஆம் வகுப்புகளின் கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பாடப் புத்தகத்தில் உள்ள பாடத்திட்டங்களின் அடிப்படையில் கொள்குறி வகையில் இருதாள்களாக தேர்வு நடத்தப்படும். ஒவ்வொரு தாளிலும் 60 கேள்விகள் இடம்பெறும். முதல் தாளில் கணிதம் தொடர்புடைய வினாக்கள் 60 இடம்பெறும். இரண்டாம் தாளில் அறிவியல் மற்றும் சமூக அறிவியல் தொடர்புடைய வினாக்கள் 60 இடம்பெறும். முதல் தாள் காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரையிலும், இரண்டாம் தாள் பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரையிலும் நடைபெறும்.

23.09.2023 **(சனிக்கிழமை) அன்று** நடைபெறவுள்ள இத்தேர்விற்கு 2023-2024-ம் கல்வியாண்டில் தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவர்கள், விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் விண்ணப்பங்களை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் 07.08.2023 முதல் 18.08.2023 வரை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணத் தொகையாக ரூ.50/- சேர்த்து மாணவர் பயிலும் பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

பூர்த்தி செய்த விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள். 18.08.2023.

**ஒம்/-**

**இயக்குநர்**

**சென்னை** – 600 006

**நாள்:** 01.08.2023